ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අතිවිශේෂමානது

අංක 2049/20 - 2017 දෙසැම්බර් මස 13 වැනි බදාදා - 2017.12.13

*2049/20 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.*

*இக்கட்டளை 2017, திசெம்பர் மாதம் 14 ஆந் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 6 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டு 2017.11.06 ஆந் திகதிய 2044/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட எச். எஸ். தலைப்பு இல. 0303.89.90 இன் கீழ்வரும் தலபத்து மீன் (sail fish - Istiophorus platypterus) மற்றும் மார்லின் மீன் (Makaira spp) சம்பந்தமான உத்தரவு மற்றும் 2017.11.07 ஆந் திகதிய 2044/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட எச். எஸ். தலைப்பு இல. 0303.89.90 இன் கீழ்வரும் தோர மீன் (Scomberomorus commerson) சம்பந்தமான உத்தரவு 2017, திசெம்பர் மாதம் 14 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*மங்கள சமரவீர,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2017, திசெம்பர் 13.*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| *I ஆம் நிரல்* | | | | *II ஆம் நிரல்* |
|---|---|---|---|---|
| *வியாபாரப் பண்ட இனம்* | | | | *விசேட வியாபாரப் பண்ட அறவீடு* |
| *இல.* | *எச்.எஸ். தலைப்பு* | *எச்.எஸ். குறியீடு* | *விவரணம்* | |
| *01.* | *03.03* | | *தலைப்பு 03.04 இன் கீழ்வரும் முள்ளற்ற மீன் துண்டுகளும் பிற மீன் இறைச்சியும் நீங்கலாக ஏனைய மீன்- குளிரால் உறையச் செய்யப்பட்டது* | |
| | | *0303.89.90* | *பிற - தலபத்து மீன்* (sail fish - Istiophorus platypterus), *மார்லின் மீன்* (Makaira spp) *மற்றும் தோர மீன்* (Scomberomorus commerson) *மட்டும்* | *கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 25.00* |
| *02.* | *08.01* | | *புதிய அல்லது உலர்த்திய கோது நீக்கிய அல்லது நீக்காத தோல் நீக்கப்பட்ட அல்லது நீக்கப்படாத தேங்காய்கள், பிறேசில் விதைகள் மற்றும் மரமுந்திரி விதைகள்* | |
| | | *0801.19.90* | *பிற - தேங்காய் பருப்பு* | *கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 1.00* |

*12-1073*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.